

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2025) முகாம் அலுவலகத்தில் கழகப் பொருளாளர், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்ததை முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் 33,450 மகளிருக்கு வழங்கி தொடங்கி வைத்தார். உடன் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஊராட்சி குழுதலைவர்கள் லோ.ரவிச்சந்திரன்,என்.இ. சத்யானந்தன், வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலையில் இன்று கழக இளைஞரணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

# கழகத்தின் தலைமைத் தொண்டனாக உங்களை அழைக்கிறேன்!

## காணொலியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 14-**

**திருவண்ணாமலையில் இன்று (14.12.2025) நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அழைப்பு விடுத்து காணொலிக் காட்சி வாயிலாக உரையாற்றினார்.**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், திருவண்ணாமலையில் நாளை (14.12.2025) (இன்று) நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு கழக இளைஞரணிக்கு அழைப்பு விடுத்து காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாட்டின் தலைமகன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசும்போது, "I belong to the Dravidian Stock" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்.

நாளை (இன்று) திருவண்ணாமலைக்கு வரும் DMK Youth Wing வடக்கு மண்டலத்தின் New Dravidian Stock, you are welcome!

வணக்கம்! நன்றாக இருக்கிறீர்களா?

வருகின்ற ஞாயிற்றுக்கிழமை திருவண்ணாமலை மாவட்டத்தில், இளைஞரணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறப் போவதாக தலைமைக் கழகம் அறிவித்தது, உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்... ஆனாலும், கழகத்தின் தலைமைத் தொண்டன் என்ற முறையில், உங்களை முறையாக அழைக்க வேண்டும் என்று இந்த வீடியோவில் பேசுகிறேன்.



### கொள்கை அளவில் வளர்த்தெடுக்க ஏராளமான முன்னெடுப்புகள்!

நம் எல்லோரையும் உடன் பிறப்புகள் என்று அழைக்க என்ன காரணம் தெரியுமா? எல்லோரது குடும்பத்திலும் அண்ணன் - தம்பி - அக்கா - தங்கை என்று இருப்பார்கள்; அதேபோல, நம் கழகத்திலும், எல்லோரும் அதே பாச உணர்வுடன் பழகவேண்டும் என்றுதான் உடன்பிறப்பே என்று உறவு கொண்டாடுகிறோம்! அப்படிப்பட்ட நம்முடைய கழகத்தின் இளைஞரணிச் செயலாளராக இருக்கின்ற தம்பி உதயநிதி அவர்கள், உங்கள் எல்லோரையும் கொள்கை அளவில் வளர்த்தெடுக்க வேண்டும் என்று பாசறைப் பக்கம் தொடங்கி, சமீபத்தில் வள்ளுவர் கோட்டத்தில் நடந்த, "அறிவுத்திருவிழா" வரைக்கும் ஏராளமான முன்னெடுப்புகளை செய்து கொண்டிருக்கிறார்.

அதேபோல, கிரவுண்ட் வொர்க் செய்ய நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம் என்று உங்கள் பெயர்கள் அடங்கிய பட்டியலை என்னிடம் காண்பித்தார். அதைப் பார்த்தபோது, 45 ஆண்டுகளுக்கு முன்பு 1980-ல் நாங்கள் இளைஞரணி தொடங்கியபோது, எப்படி பெருமையாக இருந்ததோ, அதேபோல பெருமையாகவும், கர்வமாகவும் இருந்தது!

இளைஞர்களாக பொறுப்பிற்கு வந்திருக்கின்ற உங்களுக்கு "திராவிடம்" எனும் மக்களுக்கான மாபெரும் ஐடியாலஜியை நீங்கள் பேசப் போகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்கின்ற தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக - தமிழின் உயர்வுக்காக - போராடுகின்ற மாபெரும் வரலாற்று கடமை வந்திருக்கிறது!

இந்தியாவிலேயே இன்றைக்கு தமிழ்நாடு தனித் தன்மையோடு இருக்கிறது. அந்த லெகசியின் தொடர்ச்சியாக நீங்கள் வரப் போகிறீர்கள் என்பதை நினைத்து எனக்குப் பெருமையாக இருக்கிறது.

சென்னையில் அறிவுத்திருவிழா நடந்தபோது, என்னடா... தலைநகரில் மட்டும், இப்படி நிகழ்ச்சி நடத்துகிறார்களே, மற்ற பகுதிகளில் நடந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன்... தம்பி உதயநிதி அவர்கள் இந்த வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கான அழைப்பிதழை என்னிடம் கொடுத்து, வடக்கு மண்டலத்தில் இருக்கின்ற 29 கழக மாவட்டங்கள் - 91 சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து, கிளை - வார்டு - பாக அளவில் நியமிக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர்கள் வருகிறார்கள் என்று சொன்னதும், வார்டு, கிராம அளவில் இந்த அறிவுத் திருவிழா நடைபெறப் போகிறது என்று மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

ஞாயிறு அன்று சந்திப்போம்! New Dravidian Stars! You are Welcome!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் உரையாற்றினார்.



தி.மு.க. சட்டத்துறை சார்பில் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கத்தில்" நேற்று (13.12.2025) காலை தி.மு.க. சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா. விடுதலை தலைமையில், கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் 1000 இளைஞர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள், நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், மாநில நிர்வாகிகள் ஏ.தமிழ்மாறன், என்.நவீன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வட்டச் செயலாளர் எம்.சார்லஸ் நன்றி கூறினார்.